# மெட்ரோ ரயில் இயக்க நேரம் இன்று முதல் நீட்டிப்பு

**சென்னை, மார்ச் 29:** சென்னையில் மெட்ரோ ரயில் இயக்க நேரம் சனிக்கிழமை (மார்ச் 30) முதல் நீட்டிக்கப்படுகிறது. அதன்படி, மெட்ரோ ரயில் சேவைகள் அதிகாலை 4.30 மணி முதல் இரவு 11 மணி வரை இயக்கப் பட உள்ளன.

போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில், சென்னையில் 45 கி.மீ. தூரத்துக் கான முதல் கட்ட மெட்ரோ ரயில் திட்டப் பணிகள் முடிந்து, சென்னை வண்ணாரப் பேட்டை முதல் விமான நிலையம் வரை முதல் வழித்தடத்திலும், சென்ட்ரல் - பரங் கிமலை இடையே இரண்டாவது வழித்தடத் திலும் ரயில்கள் இயக்கப்படுகின்றன. மொத் தம் 32 மெட்ரோ ரயில் நிலையங்களில், ரயில்கள் காலை 6 மணி முதல் இரவு 10 மணி



வரை இயக்கப்படுகின்றன. தினமும் சராசரி 90,000 முதல் ஒரு லட்சம் பயணிகள் வரை பயணம் செய்கின்றனர்.

இதற்கிடையில், மெட்ரோ ரயில் நேரத்தை நீட்டிப்பு செய்ய வேண்டும் என்று பல்வேறு தரப்பினர் கோரிக்கை வைத்தனர். இதை யடுத்து, மெட்ரோ ரயில் சேவை நேரத்தை நீட்டிப்பு செய்வது தொடர்பாக மெட்ரோ ரயில் நிர்வாகம் ஆலோசனை நடத்தி வந் தது. மேலும், அதற்கான சோதனை ஓட்ட மும் நடைபெற்றது. அப்போது, மெட்ரோ ரயில் இயக்க நேரம் விரைவில் நீட்டிப்பு செய் யப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்திருந்த னர்.

இந்நிலையில், மெட்ரோ ரயில் இயக்க நேரம் சனிக்கிழமை (மார்ச் 30) முதல் நீட்டிப்பு செய்யப்படுகிறது. அதன்படி, மெட்ரோ ரயில் அதிகாலை 4.30 மணி முதல் இரவு 11 மணி வரை நீட்டிப்பு செய்யப்படுகிறது.

விமானநிலைய மெட்ரோ நிலையம், வண் ணாரப்பேட்டை, பரங்கிமலை மெட்ரோ ரயில் நிலையம், சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் இருந்து அதிகாலை 4.30 மணிக்கு முதல் மெட்ரோ ரயில் இயக்கப் படும். இதுபோல, கடைசி ரயில் இரவு 11 மணிக்கும் இயக்கப்படும்.

இது குறித்து மெட்ரோ ரயில் நிர்வாக அதிகாரி ஒருவர் கூறியது: மெட்ரோ ரயில் சேவையை பொருத்தவரை தற்போது தின மும் காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை இருக்கிறது. பொதுமக்களின் கோரிக்கை மற் றும் வருவாயை மேம்படுத்தும் நோக்கில், தற் போது இயக்கப்படும் நேரத்தை சனிக்கிழமை முதல் நீட்டிப்பு செய்யப்படுகிறது.

இந்த நேர நீட்டிப்பின் மூலம் அதிகாலை மற்றும் இரவு நேரங்களில் ரயில் மற்றும் விமான நிலையத்துக்கு பயணிகள் விரைவாக சென்றடைய முடியும். பயணிகளுக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்றார் அவர்.